## பாடம் - 18

## الدرس الثامن عشر

**நபிகளார் வரலாற்றிலிருந்து முக்கிய நிகழ்வுகளும், படிப்பினைகளும் (தொடர்ச்சி)**

**تابع مواقف وعبر من سيرته ﷺ**

**நபியவர்களின் பற்றற்ற நிலை -** நடைமுறையில் பற்றின்மை எனும் பண்பு யாருக்குச் சொல்லப்படும் எனில் எவருக்கு ஒரு காரியம் இலகுவாகக் கைகூடும் என்றிருக்க அவர் அதில் ஆசை கொள்ளாமல் அதைப் புறக்கணித்தாரோ அவருக்குத் தான் சொல்லப்படும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்கள் அனைவரையும் விட உலகப் பற்றற்ற வர்களாய் இருந்தார்கள். உலக இன்பத்தில் ஆர்வம் குறைந்தவர்களாக இருந்தார்கள். உயிர் வாழப் போதுமான வாழ்வாதாரத்தைக் கொண்டு போது மாக்கிக் கொள்பவர்களாகவும், வரட்சியான வாழ்க்கையை பொருந்திக்கொள் பவர்களாகவும் இருந்தார்கள். இத்தனைக்கும் உலகம் அவர்களின் முன்னே கொட்டிக் கிடந்தது. அவர்களே அல்லாஹ்விடத்தில் கண்ணியமானவர்களாய் இருந்தார்கள். அவர்கள் விரும்பினால் வேண்டிய செல்வங்களையும் இன்பங் களையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருப்பான்.

கைஸமா(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஒரு செய்தியை இமாம் இப்னு கஸீர் அவர்கள் தமது தப்ஸீரில் பதிவு செய்துள்ளார்கள். அதாவது, 'நீங்கள் விரும் பினால் உங்களுக்கு முன் எந்த நபிக்கும் வழங்கப்படாத உங்களுக்குப் பிறகு வேறு யாருக்கும் கொடுக்கப்படாத இப்புவியின் கருவூலங்களையும் அதன் திறவுகோல்களையும் உங்களுக்கு நாம் வழங்குவோம். அது அல்லாஹ்விடம் உங்களுக்காக இருப்பவற்றில் எதையும் குறைத்துவிடாது' என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு 'அவற்றை எனக்கு மறுமைக்காக சேர்த்து வையுங்கள்' என்று நபியவர்கள் கூறினார்கள்.

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறையோ ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமாக இருந்தது! அபூதர்(ரலி)அவர்கள் கூறுகிறார்கள்: நான் மதினாவின் கற்பாங்கான இடத்தில் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களுடன் நடந்து கொண்டிருந்த போது உஹது மலை அவர்களை எதிர்கொண்டது. அப்போது, 'இந்த உஹது மலையளவு தங்கம் என்னிடம் இருந்து அதில் எனது கடனை அடைப்பதற்குரிய சிறிதளவு தங்கத்தைத் தவிர ஒரே ஒரு தீனார் மிச்சமாக இருக்கும் நிலையில் மூன்று நாட்கள் கடந்துவிடுவதை நான் விரும்பவில்லை. அல்லாஹ்வின் அடியார்களுக்கு பல வகைகளிலும் அதனை தர்மம் செய்துவிடுங்கள் என்றே கூறுவேன்' என்று கூறினார்கள். (பார்க்க: புகாரி-6444), முஸ்லிம்-991)
'எனக்கும் இந்த உலகத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? மரத்தின் நிழலில் சற்று நேரம் இளைப்பாறி விட்டுச் செல்லக்கூடிய ஒரு பயணியைப் போன்றே இவ்வுலகில் எனது நிலை இருக்கிறது!' என்று கூறுவார்கள். (பார்க்க: திர்மதி-2377, இப்னுமாஜா-4109)

**நபியவர்களின் உணவும் உடையும் -** அவர்களின் உணவைப் பொறுத்தவரை ஒரு மாதம், இரண்டு மாதங்கள் அல்ல மூன்று மாதங்கள் வரை அவர்களின் வீட்டில் அடுப்பு பற்றவைக்கப்படாமலேயே கழிந்திருக்கிறது. பேரீத்தம் பழமும் தண்ணீரும் தான் அவர்களின் உணவாக இருந்தது. சில வேளை தமது வயிற்றை நிரப்பும் அளவுக்கு எதுவும் கிடைக்காமல் பசியின் கடுமையால் அவர்கள் சுருண்டுவிடுவார்கள். பெரும்பாலும் அவர்கள் சாப்பிட்ட ரொட்டி சலிக்கப்படாத கோதுமை மாவிலிருந்து தயாரிக்கப்பட்டதாக இருந்தது. எப்போதேனும் மிருதுவான ரொட்டியை அவர்கள் உண்டதாக எந்தக் குறிப்பும் நமக்கு கிடைக்கவில்லை. மாறாக 'விருந்தாளிகள் வரும்போது மட்டும் அவர்களின் காலை உணவிலும் மாலை உணவிலும் ரொட்டியும் இறைச்சியும் சேர்ந்திருக்கும்' என்று அவர்களின் பணியாளர் அனஸ்(ரலி) குறிப்பிட்டுள்ளார்கள்.

உடை விஷயத்தில் அவர்களின் நிலை இதை விடவும் மோசமாகத் தான் இருந்திருக்கிறது. உடை விஷயத்தில் அவர்கள் எளிய நிலையையே மேற் கொண்டுள்ளார்கள்ளூ அதற்காக எவ்விதச் சிரத்தையும் எடுத்துக் கொண்டதில்லை என்பதற்கு அவர்களின் தோழர்களே சான்று பகர்கிறார்கள். இத்தனைக்கும் உயர்தர ஆடைகளைப் பெற அவர்களுக்கு சக்தி இருந்தது. அவர்களின் ஆடையைப் பற்றி ஒரு நபித்தோழர் கூறும்போது, 'நான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் ஒரு விஷயம் குறித்துப் பேசுவதற்காக வந்தேன். அப்போது அவர்கள் கனமான பருத்தி வேட்டி (மட்டும்) அணிந்து அமர்ந்திருந்தார்கள்' என்று கூறுகிறார். (பார்க்க: அஹ்மத்- 22129)

அபூபுர்தா என்ற நபித்தோழர் நபிகள் நாயகத்தின் மனைவி ஆயிஷா (ரலி) யிடம் வந்தபோது, மேலே போர்த்திக் கொள்ளும் ஒரு போர்வை கீழே அணிந்து கொள்ளும் ஒரு முரட்டு வேட்டி ஆகிய இரண்டையும் அவர்கள் எடுத்துக்காட்டி 'இவ்விரு ஆடைகளை அணிந்த நிலையில்தான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணித்தார்கள்' என்று குறிப்பிட்டார்கள். 'நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களுடன் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் தடித்த விளிம்பு களைக் கொண்ட நஜ்ரான் நாட்டு சால்வை ஒன்றைப் போர்த்தியிருந்தார்கள்' என்று அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள். (பார்க்க: புகாரி-5818, 5809, முஸ்லிம்-1057). நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணிக்கும்போது தமது வெள்ளை நிறக்கோவேறு கழுதை, ஆயுதம், தர்மமாக விட்டுச்சென்ற நிலம் ஆகியவற்றைத் தவிர தங்கக்காசையோ வெள;ளிக்காசையோ அடிமைகளையோ வேறு எதனையும் விட்டுச் செல்லவில்லை. 'எனது வீட்டில் சிறிதளவு வாற்கோதுமையை தவிர ஒரு ஜீவன் உண்ணத்தக்க ஆகாரம்கூட இல்லாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தார்கள்' என அவர்களின் மனைவி ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள். அவர்கள் மரணிக்கும்போது சிறிதளவு கோதுமைக்காக அவர்களது கவசம் ஒரு யூதனிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. (பார்க்க: புகாரி-3097, 2916)